யோகாஸன ஆலய விஜயம்

மலர் 31 | காளயுக்தி ஆண்டு ஆனித் திங்கள் June -1978 | இதழ் 6

பிச்சைய தேற்ருன் பிரமன் தலைதன்னில்
பிச்சைய தேற்ருன் பிரியா தறஞ்செய்யப்
பிச்சைய தேற்ருன் பிரமன் சிரங்காட்டிப்
பிச்சைய தேற்ருன் பிரமன் பரமாகவே.

சிவபெருமான் படைப்புக் கர்த்தாவான பிரமனின் மண்டையோட்டினை ஆருயிர்களுக்குக் காட்டி பிச்சை ஏற்பவனுனன். அவனே தன்னைவிட்டு அகலாத சக்தியின் வழி முப்பத்திரண்டு அறமும் இடைவிடாது செய்வித்துக்கொண்டிருக்கின்ருன் பிரமனின் சிரங்காட்டி இரப்பது, தான் அழிவற்றவன்; குறைவற்றவன்; ஈகையாளன் என்பதை உலகத்திற்கு எளிமையாக உணர்த்த என்பதாம்.

—திருமூலர்.

சந்தா விபரம்	உள்நாடு	சிலோன்	வெளிநாடு (கப்பல்)	விமானம்
ஆண்டு சந்தா	ரூ. 4 00	ரூ. 6-00	ரூ 15-00	ரூ. 30-00
ஆயுள் சந்தா	ரூ. 50-00	ரூ. 80-00	ரூ. 150-00	ரூ. 300-00
தனிப்பிரதி	40 காசு	50 காசு	ரூ. 1-25	ரூ. 2-00

உயர்திரு கோ. மு. சுவாமி அவர்கள் பொன்மொழி

ஜீவ சொரூபம்

நான் யார்? என்ற சிந்தனை தீவிரமாகும்பொழுது 96 தத்துவங்களின் செயல்கள் தெளிவாகும். அவைகள் ஒடுங்கிய பின்பே ஜீவ சொரூபம் வெளிப்படும்.

— திருமதி சாவித்திரி செல்வராஜன்.

பௌர்ணமி வகுப்பு

19—7—78 புதன்கிழமை இரவு 7 மணிக்குக் கீழ்க்காணும் இடங்களில் வகுப்பு நடைபெறும் :

1 யோகாசன ஆலயம் : எண் 7, வன்னியர் முதல் தெரு, சூளைமேடு, சென்னை-600 094.

2 அருள்மிகு மன்னுர்சாமி கோவில் : மன்னுர்சாமி கோவில் தெரு, இராயபுரம், சென்னை-600 013.

3 சுந்தர விநாயகர் கோவில் : சுந்தர விநாயகர் கோவில் தெரு, சின்ன நத்தம், செங்கல்பட்டு.

வேள்விப் பயிற்சி வகுப்பு

யோகாசன ஆலயம்: ஷை முகவரியில் 9—7—78 அன்றும், செங்கல்பட்டு பெரியநத்தம் பெரியரத்தினத் தெரு எண் 3 இல்லத்தில் 16—7—78 அன்றும், காலை 10 மணிக்கு வேள்விப் பயிற்சி வகுப்பு நடைபெறும். யாவரும் கலந்து பயனடைக !

மகளிர் பிரிவு வகுப்புகள்

இடம் : அருள்மிகு சேணியம்மன் கோவில், சிங்காரத் தோட்டம் ஏழாவது சந்து, வண்ணை, சென்னை-21.

பிரதி திங்கள் இரவு 7 மணிக்கு, தாயுமானவர் பாடல் விளக்கவுரை.

,, வெள்ளி மாலை 6 மணிக்கு பக்திப் பாடல் இன்னிசை.

,, சனி இரவு 7 மணிக்கு மௌன (தியான) வகுப்பு.

,, ஞாயிறு இரவு 7 மணிக்கு பக்த விஜயம் கதை வகுப்பு.

மேற்படி வகுப்புகளில் அன்பர்கள் கலந்து பயனடைக !

R. சாந்தி, B.Sc.,
செயலர் (மகளிர் பிரிவு)
யோகாசன ஆலயம்.

மகரிஷி தாயுமானவர்

ஆசையெனும்

திரு. கோ. மு. சுவாமி அவர்கள்

நிகழ்த்திய உரை விளக்கம்.

இரப்பானங் கொருவனவன் வேண்டுவகேட் டருள்செயென
　　வேசற் றேதான்
புரப்பான்ற னருணாடி யிருப்பது போல்,' எங்குநிறை
　　பொருளே! கேளாய்!
மரப்பான்மை நெஞ்சினன்யான், வேண்டுவ
　　கேட்டிரங் கெனவே மௌனத் தோடந்
தரப்பான்மை யருணிறைவி லிருப்பதுவோ பராபரமே!
　　சகச நிட்டை.

பதவுரை

இரப்பான் ஒருவன் அவன் - யாசகஞ் செய்பவனாகிய ஒருவனென்னும் அவன், வேண்டுவ-தனக்கு வேண்டியவற்றை, கேட்டு-செவியுற்று, அங்கு-அவ்விடத்து-அருள்செய் என-கிருபை செய்தருள வேண்டுமென, ஏசற்று-பழிப்பற்று, புரப்பான்-ரக்ஷிப்பவனுடைய, அருள்-கிருபையினை, நாடி இருப்பது போல்-நோக்கியிருப்பதுபோல, எங்கும் நிறை பொருளே!—எங்கும் வியாபகமான வஸ்துவே!, கேளாய்! கேட்பாயாக! மரப்பான்மை-மரத்தின் தன்மையினை யொத்த நெஞ்சினன்யான் - மனத்தினையுடைய நான், வேண்டுவ-விரும்புமவற்றை, கேட்டு-திருச்செவி சாத்தி, இரங்கு-இரங்கியருள்வாயென்று, மௌனத்தோடு-மௌன நிலையுடன், அந்தரப்பான்மை- ஆகாயத்தின் றன்மையமைந்த, அருள் நிறைவில்-தேவரீர் திருவருட் பூரண நிலையில், இருப்பதுவோ-இருப்பதுதானோ, பராபரமே!- பராபர வஸ்துவே! சகசநிஷ்டை-அடியேனுக்குச் சகசநிஷ்டை யென்று சொல்லப்படுவது, என்க.

கருத்துரை

முன் பாடலில் சுவாமிகள், ஆசையற்ற நிலையாகிய தெய்வ அருள் கிடைக்கப் பெருதவர் ஆசையெனும் வலையுள் அகப்பட்டு கற்ற கல்வி

கேட்ட கேள்விகளனைத்தும் இழந்து ஐம்புலன்களின் கொடுமைக்கு ஆளாவர்: ஆதலினால் நின்னருள் வேண்டுமென இறையருளை வேண்டி நின்றார். இப்பாடலில், இரப்பவன் ஈகையாளனின் அருள் ஒன்றையே நாடி இருப்பதுபோல, மரப்பான்மை நெஞ்சினனாகிய யான் சகச நிட்டை கூடவேண்டி மனமற்ற வெளியில் நின்று யாசிக்கின்றேன். எங்கு நிறை பொருளே! நான் வேண்டுவதைச் செவிமடுத்து அருள் பாலிப்பீராக! என வேண்டுகின்றார்.

விரிவுரை

தாயும் தந்தையுமாகிய பரம்பொருளினிடத்தில் யாசித்து நிற்கின்றார் தாயுமான அடிகளார். அவர் வேண்டுவது இகத்துக்கு வேண்டும் பொருளன்று! பரத்துக்கு வேண்டும் நிட்டையே யாகும். யாசகம் (பிச்சை) கேட்பதை இகழ்ச்சியாகவே நீதி நூல்கள் எடுத்துரைக்கின்றன. அதே நேரத்தில் இல்லாதார்க்கு இருப்பவர் அளித்துண்ண வேண்டும் எனவும் கூறுகின்றன "ஏற்பது இகழ்ச்சி, ஐயம் இட்டுண்" இவை இரண்டும் சிந்தனைக்கு விருந்தாக அளித்திருக்கின்றார் ஔவைப் பாட்டி. "இம்மியரிசித் துணையானும் வைகலும் நும்மில் இயைவ கொடுத்துண்மின்" என்பது நாலடியார்.

தாயுமானார் இம்மைப் பொருள்களை வேண்டி இரங்கினார் அல்லர். இவை வந்து சேரச் சேரத் துன்பமே மிகுதலின் "எறிதிரைக் கடல் நிகர்த்த செல்வம் மிக அல்லல் என்று ஒருவர் பின் செல்லாது" என்றனர். ஆனால் அகந்தை அகற்றுவதற்காக "ஊரால் ஒருநாள் கையுண வேற்றுண்டால் எனக்கிங் கொழிந்திடுமே" எனக் கூறுகின்றார்.

மறுமைக்குக் கூடும் நிட்டைக்காக ஒவ்வொருவரும் பிச்சை கேட்டே பெறவேண்டியவர்களாகின்றோம். யாரிடத்துக் கேட்பது? கொடுப்பவர் யார்? பெறவேண்டியது எது? இதுவே பகுத்தறிவு படைத்த மானிடர் கேட்க வேண்டிய கேள்வி! கேட்க வேண்டியது குருவினிடத்தே யாகும்; கொடுப்பவரும் அவரே யாவர்: பெற வேண்டியது ஒப்பற்ற ஒரு மொழி! அவரவரின் பக்குவமறிந்து வழங்குகின்றார். நாம் பெறவேண்டியது இருகரம் நீட்டியன்று! கபாலத்தில்! அஃதாவது சிரசின் உச்சியில்! இதை விளக்குவான் வேண்டியே கபால ஈஸ்வரர் (மயிலை கபாலீஸ்வரர்) ஒன்பதாம் நாள் பெருவிழாவில் பிச்சாண்டி வேடம் பூண்டு கபாலத்தை ஏந்தி வருவதாக உலக மக்களுக்குச் சுட்டிக் காண்பிக்கப்படுகின்றது. ஆனால் நாம் என் செய்கின்றோம்? உட்பொருளை யுணராது நம்மிடமுள்ள அற்பச் செல்வங்களை ஆண்டவனுக்குப் பிச்சையிடுகின்றோம். என்னே அறியாமை!

உலக வழக்கில் பிச்சையிடும்போதும் எச்சரிக்கையுடன் இட வேண்டும். "பாத்திரமறிந்து பிச்சையிடு" என்ற முதுமொழி சிந்திக்கற்பாலது. முன்னொரு காலத்தில் செல்வந்தர் ஒருவர் நாள்தோறும் குதிரை வண்டியில் கடைவீதிக்கு வருவது வழக்கம். அவர் வரும்போது அவரைப் பணிந்து நின்று பிச்சைக்காரர் பலர் யாசித்து நிற்பர். அவர்களுக்கெல்லாம் இல்லையெனாது வழங்குவார். அவ்வாறே ஒருநாள் ஒருவன் "ஐயா காலணா போடுங்க" என்று வேண்டினான். அவனுக்கும் இல்லையெனாமல் கொடுத்தார். அதைப் பெற்றுச் சென்ற அவன் காலணாவை முதலீடாக வைத்துத் தொழில் செய்ய நினைந்தான். மீன் பிடிப்பதற்காக வேண்டிய தூண்டில் முள் கயிறு ஆகியவை வாங்கிச்

சென்று மீன் பிடித்து விற்ருன். நல்ல லாபம் கிடைத்தது. அதையே தொழிலாகக் கொண்டு நாளும் மீன்பிடி தொழிலைப் பெருக்கினுன். பெருஞ் செல்வந்தனுனுன். பல்லாயிரக் கணக்கான உயிர்கள் மாள் வதை அவன் பொருட்படுத்தவே இல்லை.

அத் தீவினைகள் யாவும் ஒன்று சேர்ந்து அதற்குக் காரணனுன முன் செல்வந்தரைப் பற்றியது. காலணு பிச்சையிட்ட அச் செல்வந்த ருக்குப் பாவச் சுமைகள் திகரித்தன. வீதியில் நின்று வயிற்றுப் பசிக்குக் காலணு கேட்கும துன்பத்திற்கு ஆளானுர். ஒருநாள் மீன் பிடித்துச் செலவந்தனுனவன் குதிரை வண்டியில் கடைவீதிக்கு வந் தான். அவனிடம் கையேந்தி "ஐயா பசிக்குதையா காலணு போடுங்க' என்று வேண்டினுர். காலணு எடுத்துக் கொடுக்க கை நீட்டியவன் பிச்சை கேட்டவரை உற்றுப பார்த்தான். ஆகா! அன்ருெருநாள் நமக்குக் காலணு கொடுத்தவரல்லவா இவர்? இவராலன்ருே நான இப் பெரு நிலைக்கு ஆளானேன்; ஐயோ! இவா நம்மிடம் கைநீட்டிக் காலணு கேட்கும நிலையானதே! என்று வண்டியினின்றும் இறங்கி அவரைத் தழுவிக்கொண்டு, ஐயா! என்னைத் தெரிகிறதா? முன்பு ஒருநாள் நீங்கள் கொடுத்த காலணுவைக் கொண்டு மீன் பிடிக்கும தொழிலில் ஈடுபட்டுப் பெருஞ் செல்வந்தனுக இருக்கின்றேன் என்ருன.

இதைக் கேட்டதும் பிச்சைக்கார நிலையிலிருந்த முன் செல்வந்தர் மிகவும துடிதுடித்துப போனுர். ஐயோ! யான் கொடுத்த காலணு இவரைத் தீவினைக்கு ஆளாக்கியதே! பல உயிர்கள் மடிவதற்கு யான காரணனுக இருந்தமையன்ருே எனக்கு இக் கொடுமை ஏறபட்டது? என தன்னைத்தானே நொநது கொண்டார். ஆக இதனின்றும் "பாத்திரமறிந்து பிச்சையிடு" என்பதை உணரக் கடமைப்பட் டுள்ளோம்.

இங்ஙனமே மாணுக்கரின் மனமாகிய பாத்திரமறிந்து குருமார்கள் உபதேசம் என்னும் பிச்சையிடுவர். மாணுக்கர் பெற்ற உபதேசத்தைப் பயனறச் செய்தால் அக் குற்றம் குருவைச சாரும. குருவருள கிடைக் கப்பெற திருவருள் துணை நிற்க வேண்டும். அத திருவருளை நினைநத தாயுமான அடிகளார், "இரப்பானங் கொருவனவன் வேண்டுவ கேட் டருள் செயென ஏசற்றேதான் புரப்பான தன்னருள் நாடி யிருப்பது போல் எங்குநிறை பொருளே கேளாய்" என விண்ணப்பஞ் செய் கின்ருர்.

ஞானி யொருவர் இரயில் நிலையத்தில் நின்றிருந்தார். பெரும் வியாபாரி ஒருவர் ஆங்கு வந்தார். சாது அவரின் மனுேநிலையறிநது அவருக் கருள்செய்வான வேண்டி சோதிக்க எண்ணினுர். ஐயா! நான் கல்கத்தா செல்ல வேண்டும காசில்லை என்ருர். அவ்வியாபாரி உடனே மூன்ரும் வகுப்புக்கான டிக்கட்டு ஒன்று வாங்கித் தந்தார். சாது எனக்கு இரண்டாம வகுப்பு டிக்கட்டு வேண்டும என்ருர். என்னய்யா? கேட்பது பிச்சை! இதில் வேறு கௌரவமா? என்று ஏசி னுர் அவ்வியாபாரி. இல்லை இல்லை நான் இரண்டாம் வகுப்பில்தான பயணம் செய்யப் போகிறேன் என்ருர் சாது. முணுமுணுத்துக கொண்டே இரண்டாம் வகுப்பு டிக்கட்டு மாற்றக் கொடுததா வியா பாரி. அதையும்பெற மறுத்த சாது நான் முதல் வகுப்பில் பிரயாண செய்யப் போகிறேன் டிக்கட்டை மாற்றிக் கொடு! எனக் கேட்டா

இரயில் புறப்பட வேண்டிய காலமும் நெருங்கிவிட்டது. ஆத்திரம் ஆத்திரமாக வந்தது வியாபாரிக்கு. தருமம் செய்யப் புகுந்து கரும மாகப் போய்விட்டதே! என்று கோபமாக ஏசினுர். மக்கள் கூட்டம் திரண்டு விட்டது. சாதுவின் செயலைக்கண்ட சிலர் அடிக்கவும் முற்பட் டனர். ஒருவர் தடுத்து நிறுத்தி சாதுவாக இருக்கிருர்; செய்ததும் செய்தீர்கள்; போகட்டும் முதல் வகுப்பு டிக்கட்டை வாங்கிக் கொடுத்து விடுங்கள் என்று பணிந்துரை செய்தார். அவ்வண்ணமே வயிற்றெரிச்ச லோடு அவ்வியாபாரி முதல் வகுப்பு டிக்கட் எடுத்துக் கொடுத்தார். அதை வாங்கிய சாது வீசி எறிந்தார். எனக்கு ஏனய்யா இந்த டிக் கட்டு? உம்மைச் சோதிக்கவே இந்நாடகம் நடித்தேன் என்ருர். வியாபாரி வெட்கித் தலைகுனிந்தார்.

தாயுமான அடிகளாரும் ஆண்டவனை வேண்டி முதல் வகுப்புப் பயணச் சீட்டுக் கேட்கின்ருர். ஆனுல் சோதிக்கவன்று! அவனைச் சோதிக்க நாம் யார்? இரங்கி வேண்டுகின்ருர். எங்ஙனம்? யாசிப்பவன் ஈகையாளரின் கருணை ஒன்றையே எதிர்பார்த்து நிற்பதுபோல. முதல் வகுப்புப் பயணச் சீட்டு என்பது எது? ''மௌனத்தோடு அந்தரப் பான்மையெனும் அருள் நிறைவாகிய சகச நிட்டையாகும்.

அனைத்து அடியார்களும் மௌன நிலையையே வேண்டினர் மௌனத்திலேயே உண்மையான நிலைபெற்ற இன்பம் பொதிந்துள் ளமையைத் தெளிந்தவர்கள் அவர்கள். சுவாமிகளுக்கு மௌனகுரு மௌனத்தின் தன்மையை உணர்த்தினமையை வருமாறு பகர்கின்ருர்;

இனிய கருப்புவட்டை என்னுவில் இட்டான்
நனியிரதம் மாருது நானும்—தனியிருக்கப்
பெற்றிலேன் மோனம் பிறந்தவன்றே மோனமல்லாற்
கற்றிலேன் ஏதுங் கதி.

இனிப்பு மிகுந்த வெல்லக் கட்டியை நாவில் இட்டதும் சுவை உணர்வதுபோல, மௌன நிலையை மௌனகுரு உபதேசித்த பின்னரே அதன் சுகந் தெரிந்தது! திரோதான சக்தியால் மறைக்கப்பட்டு என்னுள்ளே இருந்த இச் சுகத்தை வெளிப்படுத்திஞன் மோனகுரு என வியந்து போற்றுகின்ருர். கொங்கணர் எனுஞ் சித்தர் தன் குரு நாதர் தன பொய்வேடத்தைக் கலைத்து மெய்வேடத்தைக் காட்டிஞன் என்பதைக் கூறுகின்ருர்.

காயச் சரக்கெடுத்தே சாதிலிங்கந் தான்சேர்த்து
மாயப் பொடிகலந்து வாலுழுவை நெய்யூற்றி
பொட்டென்று பொட்டுமிட்டான் புருவத்திடை நடுவே
இட்ட மருந்தாலே—என் கண்ணம்மா
இவ்வேட மானேண்டி

ஒவ்வொருவரும் இகத்தில் திருமண வாழ்க்கையில் பொட்டிட்டுக் கொள்வது போல பரத்துக்குரிய பொட்டிட்டுக் கொள்ளல் வேண்டும். ''இதனையுணர்ந்த எல்லோரும் மோனநிலை யடைந்தனர். அறியாத புன்மையறிவுடைய யான் மனோநிலையில் நான்எனும் அகந்தையோடு ஏன் அலைந்தேன்? என மௌன குருவை நினைந்து கேட்கின்ருர் அடிகளார்;

எல்லாமே மோனநிறை வெய்தலால் எவ்விடத்தும்
நல்லார்கள் மோனநிலை நாடினர்—பொல்லாத
நானெனஇங் கொன்றை நடுவே முளைக்கவிட்டிங் (கு)
ஏனலைந்தேன் மோனகுரு வே.

சிந்தனையும் செயலும் அற்ற நிலையே மோன மெனப்படும். கிணற்றில் வீழ்ந்த கல்லுக் கொப்பாகும். இதைத் தெரிந்து கொள்ள நாம் நம்மை உருவாக்கியிருக்கின்ருேமா? அவ்வாறெனின் பித்தன் என்றல்லவோ உலகம் சொல்லும்? ஆண்டவனையே பித்தன் பேயன் எனக் கூறுகின்றனர்! "பித்தன் என்று பேசவே வைத்ததென்ன வாரமே" என்பர் தாயுமானுர். பித்தன் என்று சொல்கின்ற பித்துத் தெளிய வேண்டும். பித்தந்தெளிய மருந்தொன்றுண்டு என்றனர் நந்தனுர்.

மௌனம் என்பது சமயங் கடந்த நிலையாகும். "சைவ முதலாம் அளவில் சமயமும் வகுத்து மேற் சமயங் கடந்த மோன சமரசம் வகுத்த நீ உனையான் அணுகவும் தணணருள் வகுக்க விலையோ" என்ருர் தாயுமானுரும். சமயங் கடந்த மோனத்தமலைய சமரசம் காணுகின்ருர் சுவாமிகள். அங்கு நின்று வியக்கவும் செய்கின்ருர்! "அந்தோ ஈததிசயம்! இச்சமயம் போல இன்று! அறிஞரெல்லாம் நடுவறிய அணிமா ஆதி வந்தாடித் திரிபவர்க்கும் பேசா மோனம் வைத்திருந்த மாதவர்க்கும் .....இதுவன்றித் தாயகம் வேறில்லை இல்லை! என்று கூறியவர், இதுவே சன்மார்க்கம் எனவும் தெள்ளத் தெளியக் கூறியுள்ளார்.

வேதங்களனைத்தும் இதனை எடுத்தெடுத்து பறை சாற்றி அறைகின்றனவாம்;

ஓல மறைக ளறைகின்ற வொன்றது
மேலை வெளியி லொளிரும பரஞ்சுடர்
ஓது சரியை கிரியையும புணர்நதவ ரெவராலும்

ஓத வரிய துரியங் கடந்தது
போத அருவ சுருபம பரபஞ்சமும்
ஊனு முயிரு முழுதுங் கலநதது சிவஞானம்

சால வுடைய தவர்கண்டு கொண்டது
மூல நிறைவு குறைவின் றி நின்றது
சாதி குலமு மலதன் றி யன்பர்சொ னவியோமஞ்

சாரு மநுப வரமைந்த மைந்தமெய்
வீடு பரம சுகசிந்து இந்த்ரிய
தாப சபல மறவநது நினகழல் பெறுவேனே

வால குமர குககந்த குன்றெறி
வேல மயில் எனவந்து கும்பிடு
வான விபுதர் பதியிந்த்ரன் வெந்துயர் களைவோனே

வாச களப வரதுங்க மங்கல
வீர கடக புயசிங்க சுந்தர
வாகை புனையும் ரணரங்க புங்கவ வயலூரா

ஞால முதல்வி யிமயம் பயந்தமின்
நீலி கவுரி பரைமங்கை குண்டலி
நாளு மினிய கனியெங்க ளம்பிகை த்ரிபுராயி

நாத வடிவி யகிலம் பரந்தவ
ளாலி னுதர முளபைங் கரும்புவெ
ணுவ லரசு மணவஞ்சி தந்தருள பெருமாளே

இங்ஙனம் விளக்குபவர் திருப்புகழ் பரவிய அருணகிரிப் பெருமானுவார்.

வேதங்களனைத்தும் ஓலமிடும் மௌன நிலையிலேயே பரம் பொருளின் தன்மை உணர முடியுமே யன்றி மனோ நிலையில் உள்ளவர்களால் சிறிதளவும் உணர வியலா. இவர்கள் களிநடம் புரிந்துவரும் காலனுக்கு ஆளாவர். இத்தகையோர் மூவிதமாம் அகந்தைக்குட் பட்டோராவர். மூவிதமாவன; பூதாதி அகங்காரம், தைதச அகங்காரம், வைகரி அகங்காரங்களாகும்.

"ஆங்கார மற்றுன் அறிவான அன்பருக்கே
தூங்காத தூக்கமது தூக்கும் பராபரமே"

என தாயுமானுர் மொழிந்தவாறு, அகந்தை அற்றவரே மேலான இன்பத்தில் திளைக்க முடியும். அன்றியும் ஒப்பற்ற ஒருமொழியின் துணையால் இறைவனின் திருவருளை யுணர்ந்து ஒன்றுபடுவர். இதனைக் கந்தரலங்காரம் சிந்தாமணியாய் விவரிக்கின்றது.

ஆங்காரமும் அடங்கார் ஒடுங்கார் பரமானந்தத்தே
தேங்கார் நினைப்பும் மறப்பும்அருர் திணைப்போது அளவும்
ஓங்காரத்து உள்ஒளிக்கு உள்ளே முருகன்உருவம் கண்டு
தூங்கார் தொழும்பு செய்யார் என்செய்வார் யமதூதருக்கே.

மௌன நிலை சித்தி பெற்ற பின் ஆருவது ஆதாரமான புருவத் திடைவெளியில் சிவன் எனப்படும் பரம்பொருளின் உருவம் அருவம், அருவுருவம் என மூவிதத் தோற்றமும் காணப்படும். காண்பது மெய்யறிவாம். காணபான, காணப்படும் பொருள், காட்சி என்பதை ஞாதுரு, ஞானம் ஞேயம் என்பர். இக்காட்சிக்கு அழைத்துச் செல்வது மனோன்மணியம் எனப்படும் சக்தியாகும். புதிய அனுபவம் இங்ஙனம் வாய்க்கப் பெறுவோர்க்கு மனம் சலனப்பட்டு அச்சத்தைக் கொடுக்கும். இறந்துபடுவோமோ? என்ற பீதியும் சிலருக்கு வாய்க்கும், "தேகம் நீங்கும் என எண்ணிலோ நெஞ்சம் துடித்து அயருவேன்" என்பது தாயுமானுரின் அனுபவம். இதையும் கடந்த பின்னர் அளப்பரும் ஆகாயம் வெளியாகும். பூதாகாசம், மனோகாசம், சிதாகாசம், ஞானுகாசம், பராகாசம் ஆகிய ஐந்து ஆகாயங்களும் கலந்த பெரு வெளி காணப்படும். மேலும் பயணஞ்செய்ய, பரிதி (சூரியன்) மதி (சந்திரன்) யைக்காட்டிலும் அகண்ட ஒளியான திருக்காட்சி வெளிப்படும். இவ்வண்ணம்,

பாராதி ககனப் பரப்பு முண்டோவென்று
படர்வெளிய தாகிஎழுநாப்
பரிதிமதி காணுச் சுயஞ்சோதியாய் அண்ட
பகிரண்ட உயிர்எவைக்கும்

நேராக அறிவாய் அகண்டமாய் கண்டநிலை தாயுமானுரின் நிறைநிலை அனுபவமாகும்.

உண்டவர்க்கே பசியடங்குமாபோல் இத் திருக் காட்சியைக் கண்டவர்க்கே காதல் அடங்கும். இதை இயம்புபவரும் சுவாமிகளே யாவர்.

உண்டவர்க் கன்றி உட்பசி ஓயுமோ
கண்டவர்க் கன்றி காதல் அடங்குமோ
தொண்ட ருக்கெளி யான்என்று தோன்றுவான்
வண்டமிழ்க்கிசை வாக மதிக்கவே.

இத்தன்மைத்தாய சொல்லற்கரிய மௌன வித்தையை அளிப்பவர் குருவே யாவர். பிற நாட்டிற்குச் செல்ல பயணச்சீட்டு (Passport) பெறுவது போல, போதாந்த நாடு செல்ல வேதாந்த வீடறிந்து மௌனோபதேசம் பெற வேண்டும். பெற்ற பின்னரும் வைராக்கியம் எனும் உறுதியுடன் பற்ற வேண்டும்.

முன்னொரு காலத்தில் அரதத்த சிவாச்சாரி என்பவர் நாள்தோறும் ஆலயத்திற்குச் சென்று விக்கிரக வழிபாடு இயற்றி வந்தார். இடையில் நான்கு நாள்களாக ஆலயத்துக்குச் செல்லாமல் இருந்து விட்டார். பின்பொருநாள் வழக்கமாகச் செல்வது போல ஆலயத்துக்குச் சென்றார். அங்கே அவர் கண்ட காட்சி நடுங்க வைத்தது. மலைமலை யாகக் கண்ணீர் சோர நின்று தேம்பிக் கொண்டிருந்தார். அக் காலத்தில் ஆலயங்களில் தாசிகள் நடனமாடுவது வழக்கமாக இருந்தது. அக்கோவிலில் நாள்தோறும் நடனமாடும் தாசி ஒருநாள் வாராமல் நின்று விட்டதால் கோவில் ஆணையாளர் அவளை மரத்தில் கட்டி சாட்டையினால் நையப் புடைத்தார். மக்கள் கூட்டமாகத் திரண்டு அதை வேடிக்கையாகப் பார்த்துக் கொண்டிருந்தனர். அங்கு நின்ற சாது ஒருவரே அக்காட்சியை காணச் சகியாமல் மனங் கசிந்து கண்ணீர் சிந்தினார்.

இவர் கண்ணீர் சிந்துவதைக் கண்ட சிலர் சிற்றறிவு கொண்ட மனத்தினராய், சாதுவுக்கும் அப் பெண்ணுக்கும் தொடர்புள்ளதாகக் கதை கட்டி அதனாலேயே அழுவதாகவும் அங்கலாய்த்தனர். என்னே அறியாமை! இத்தகையோரும் உலகில் வாழ்கின்றனர். ஒவ்வொருவ ரும் அவரவர் மனப்பாங்கிற்கு ஏற்ப கற்பித்துக் கூறுகின்றனரேயன்றி உண்மை நிலையை உணரப் பெற்றாரில்லை. இவையனைத்தையும் கண்டும் கேட்டும் மனம் வெதும்பிய ஒரு அன்பர்மட்டும் சாதுவை நெருங்கி அழுவதற்குக் காரணம் கேட்டார். ஐயா! ஒரே ஒருநாள் அப்பெண் வாராமைக்காக இப்படி மிருகத்தனமாக அடித்துக் கொல்லு கின்றனரே! நான் நான்கு நாளாக கோவிலுக்கு வரவில்லையே! என்னை ஏன் அடிக்கவில்லை? என்னையும் அடித்தால்தானே எனக்கும் புத்தி வரும் என்று தேம்பித் தேம்பி அழுதார்.

இங்ஙனம் சாதகன் தான் பெற்ற உபதேசம் எனும் பொருளை தன் உயிரினும் மேலாகக் கருதிப் போற்றுதல் வேண்டும்.

இவ்வளப்பரும் பெருமை மிக்க மௌனத்தின் தன்மை சொல்லால் கூறி முடியாது என்பது ஆன்றோர் கருத்து.

கூடுவது புருவமய்ய வெளியின் உள்ளே
குறிப்பாக மௌனத்தை மூட்டு மூட்டு
வாடுவது மனோன்மணியுஞ் சிவனும் தோன்றும்
மாகாயஞ் சருவ வியாபகமும் தோன்றும்

நாடுவது கனலொளி போல்விந்து தோன்றும்
நாகமது கோடிமதி போலே தோன்றும்
தேடுவது வனந்தஆனந்தந் தோன்றும் சிவசிவா
மவுன வித்தை செப் பொணுதே.

சாதகர் தாம் பெற்ற மவுன வித்தினின்றும் பெறும் அனுபவங்கள் பலப்பல! அனுபவித்ததை மனோநிலைக்குத் திரும்பி எடுத்து மொழிவது சவிகற்ப சமாதி எனவும், அதனோடு இரண்டறக் கலப்பது நிருவிகற்ப சமாதி எனவும் கூறுவர். "வானத்தின்மீது மயிலாடக் கண்டேன் மயில் குயிலாச்சுதடி" என அருட்பிரகாச வள்ளலார் கூறியது சவிகற்ப சமாதியாம்.

"தீதணையாக் கர்ப்பூர தீபமென நான்கண்ட
சோதியுடன் ஒன்றித் துரிசறுவ தெந்நாளோ"

என தாயுமான அடிகளார் கூறியது நிருவிகற்ப சமாதியாம்.

அருள் நிறைவாகிய சகசநிட்டைகூட மௌனம் சித்தி பெற வேண்டும். மௌனம் சித்திபெற மனம் ஒன்றுபட வேண்டும். இங்ஙனம் ஒன்றுபடாமல் மரத்தின் தன்மை ஒத்த மனம் படைத்தவனாக இருக்கின்றேனே! என்று தாயுமான அடிகளார், இப்பாடலில் "மரப்பான்மை நெஞ்சினன் யான் வேண்டுவ கேட்டிரங்கெனவே மௌனத்தோடு அந்தரப் பான்மை அருள் நிறைவில் இருப்பதுவோ பராபரமே சகச நிட்டை" என பரம்பொருளை விளித்து வேண்டுகின்றனர். பிறிதோர் பாடலில் சுவாமிகள், "இரும்போ கல்லோ மரமோ என் இதயம் யாதென் றறியேனே" என தன்னைத்தானே நொந்து கொள்கின்றார். இறைவனுடைய அருள் நிறைவு கிடைக்கப்பெற்றால் மனம் இளகி, உணர்வு கரைந்து, அறிவு அவிழ்ந்து வெட்ட வெளியில் சகசநிட்டை கூடி பேரின்ப பெருவாழ்வு பெறுவர்.

அதை வேண்டியே சுவாமிகள் இப்பாடலில், பிச்சை கேட்போன் கொடுப்பவனின் கருணை ஒன்றையே நாடி யிருப்பதுபோல, ஐயனே! யானும் நின்னை வேண்டி நிற்கின்றேன் நிட்டைகூட நின்னருள் வழங்குவீராக என இறைஞ்சுகின்றார். அவரின் வழிநின்று நாமும் இறைஞ்சி வாழ்த்துவோமாக!

அன்பர்களுக்கு ஓர் அரிய வாய்ப்பு!

புதன்கிழமைதோறும் இரவு 7 மணியளவில் சென்னை மண்ணடி லிங்கிசெட்டித் தெருவிலுள்ள அருள்மிகு செல்வ விநாயகர் கோவிலில், யோகாசன ஆலயத் தலைவரும் நிறுவனருமான உயர்திரு கோ. மு. சுவாமி அவர்கள் "கைவல்ய"த்திற்கு வேதாந்த அனுபவ விரிவுரையும், தாயுமான சுவாமிகளின் பாடலுக்கு உட்பொருள் ஆராய்ச்சி உரையும் தொடர்ந்து ஆற்றி வருகின்றார்கள். அன்பர்கள் அனைவரும் இந்நல் வாய்ப்பினைப் பயன்படுத்தி பெரும்பேறு பெறுவீர்களாக!

(ஆ.ர்.)

WINGS OF DIVINE WISDOM

BY YOGI SIVALINGAM—U. S. A.

Watch always by yourself,
Watch always by knowings,
Watch always by the practical,
Watch always by the Grace of the Lord,
Watch always by the breath,
Breath is life and each thought comes for your life,
Breath is life and each heart-beat is your each day life,
Breath is life and be clear to live,
Breath is life and know the way to live,
Breath is fire and burn your thoughts,
Breath is fire and burn your karma,
Breath is fire and burn your craziness,
Breath is life and find your life in it,
Breath is life and don't search the small mind,
Breath is life and don't involve with the thoughts,
You do breathings, the Lord will hear what are your problems,
You do breathings, the Lord will hear for your progress,
You do breathings, the Lord will grant you the best,
You do breathings, the Lord will grant yoga-life,
You do breathings, the Lord will grant which is right for you,
You do breathings, the Lord knows where you are,
You do breathings, the Lord will clear up the bad asuras,
You do breathings, the Lord will clear the difficulties,
Do all for the Lord and Guru,
Do all good for all,
Do all good for your SELF,
Do all good for your Enlightenments,
Do all good for your Self-knowledges,
Searching many nothing comes,
Deeply inwards attain, then nothing mental,
Deeper inwards, then the ghosts all go away,
Do dearest life with the Lord, He will take care of you,
Be dearest and closer to God, He knows how much you are climbing.*

Endless thoughts give one great punishments,
Endless birth & death give one great un-satisfaction,
Endless pleasure enjoyments give one great selfishness,
Endless attachments give one great sufferings,
Practical way to release the mental illness,
Practical way to release the movement sufferings,
Practical way to release the shirt of the mental-shadows,
Practical way to release the un-knowing material life,
Experiences after great relaxations,
Experiences after one loses the way to practice,
Experiences after one gains the rule of the Inner-life,
Experiences after one wins the True-knowledge,
Pranayama destroys the worthless, uncounting, negative thoughts,
Pranayama destroys the outer ruler of the mind,
Pranayama destroys the un-knowing, the sufferings,
Pranayama destroys the birth & death,
Asana means one way to sit to know to relax,
Asana is great seat for sitting to think the Reality,
Asana is one of the great divine tonics for curing ailments,
Asana is the God's satisfying divine food,
Concentration way to attain the divine powers,
Concentration way to attain the Inner-self,
Concentration way to attain the Self-knowledge,
Concentration way to attain the Divine-foods.*

தல வழிபாட்டுச் சுற்றுலா

யோகாசன ஆலய தல வழிபாட்டுச் சுற்றுலாக் குழுவினர் 14—5—78 அன்று ஒருநாள் சுற்றுலா அமைத்துக் கொடுத்தனர். சென்னையிலிருந்து விடியற்காலை 6 மணிக்குப் புறப்பட்ட இக்குழுவினர், மாங்காடு, திருப்பெரும்பூதூர், திருப்பாற்கடல், சோளிங்கர், வள்ளிமலை, திருவலம், இரத்தினகிரி ஆகிய தலங்களுக்குச் சென்று ஆலய வழிபாடு இயற்றியும், சாதுக்கள் பலரை தரிசித்தும் வந்தனர். ஆங்காங்கு யோகாசன ஆலய பிரார்த்தனைப் பாடல், நாமாவளிகள் பாடி மனங் குளிர்ந்த குழுவினர் இரவு 11 மணிக்கு சென்னை வந்து சேர்ந்தனர்.

செய்தி - S. வைரவன்,
செயலர், சுற்றுலா குழு.

YOGASANAS

By Sri R. Meharbabu, B.Sc., M.A., B.T.

(Continued from previous issue)

YOGA

Yoga practice constitute eight branches. They are Iyama, Nyama, Asana, Pranayama, Pratyahara, Dharanai, Dhyana and Samadhi. We have already discussed Iyama and Nyama in the previous editions. The first four branches are dealing on the physical aspects and rest of the four branches are dealing on the spiritual aspects. So what all we see in the Universe, is to be divided into two things. The first is the power of soul or spirit and the second is the power of Prakrit or Matter. Again the Matter is to be divided into two i.e., the Supreme Soul and the Ordinary Soul. So the distinct Indestructible matters are only three. They are Brahmam or the Super Power, Jeevan or Soul and Prakrit or Matter. Of these Brahmam or Super Power is a separate matter and it has neither comparison nor attraction. It may be considered as both high and low living beings. It may be considered as male or female. It is to be understood that the Lord of Heaven is one, who is the Creater of the Universe, the Snper Soul, the All Pervading, the shape of energy, power and bliss, the holy manners in his character and activities, the all existing, the shapeless person, the all embracing power, the best saviour, the best judge, responsible for the creations, rulings and destructions, awarding the fruits of life according to one's cause or karma etc. etc.

Soul is the next indelible and lasting matter to the Super power. The character oriented cause or karma of soul has the importance of birth and death. Unlike the Lord of Heaven or Parameshwara, the soul is subjected to the Laws of Causation or Karma. A silly person will become a prey for sensuous pleasures and reap its consequences. Birth is taken place according to one's causation. Birth after birth, during one's life-time knowledge is to be enlarged with the help of the body and know his 'self' so as to mingle with the great knowledge of Supreme Bliss which is responsible for the birth and attain the aim of life-immortality or Moksha from the inert stage or samadhi. The creations are so done in order to secure pure, perfect and perpetual happiness in the shape of immortality or Moksha to the soul. This is said to be the philosophy of soul or life; which every one should know.

Thirdly comes the philosophy of Prakrit or matter. This philosophy help creations. We have already expressed that

creations are carried out of the Yoga power of the Soul Supreme. Just like the Yoga power of the Supreme Soul which causes creations with the help of matter in the Universe, body is so shaped for the soul to accomodate. Thereafter the soul should try to attain the Supreme Bliss by using its 'Seif knowledge' and with the help of the body.

We have already mentioned that the first four chapters of Yoga i.e. Iyama, Nyama, Asana and Pranayama are the essential practices for the body only. (Let us discuss Asanas from the next edition).

சக்தி - II

S. முருகேச பாண்டியன் B.E.,

(சென்ற இதழ்த் தொடர்ச்சி)

சக்தியானது தனித்து இயங்கும்போது 'மின்காந்த அலைகள்' என அழைக்கப்படுவதாக குறிப்பிட்டிருந்தோம். கடலிலே அலை எழுவதற்கு நீர்போல் மின்காந்த அலைகளுக்கும் ஓர் ஊடகம் தேவைப்பட்டது. எனவே ஈதர் என்ற கற்பனை ஊடகம் ஒன்று புகுத்தப்பட்டது. ஆனால் இக் கொள்கையினால் 'ஒளி மின் விளைவு' (Photo Electric Effect) போன்ற சில உண்மைகளை விளக்க முடியவில்லை. எனவே ஃபோடான் (Photon) என்ற நுண்ணணுக்கள் மூலமாக மின்காந்த அலைகள் செயல்படுகின்றன என்றும், இந்த நுண்ணணுக்களே அலை போல் இயங்கவல்லன என்றும் ஓர் கருத்து உருப்பெற்றது. இக் கொள்கை அனைவருக்கும் கருத்துக்கு இசைவானது.

இதேபோல் ஒப்புமையால் எல்லாவகையான சக்திகளுக்கும் நுண்ணணுக்கள் கற்பிக்கப்பட்டன. காந்த சக்தியானது 'மேக்னான்' (Magnan) என்ற நுண்ணணுக்கள் மூலமாகவும், ஒலி, ஃபோனான் (Phonon) என்ற நுண்ணணுக்கள் மூலமாகவும், ஒளி, ஃபோடான் (Photon) என்ற நுண்ணணுக்கள் மூலமாகவும் செயல்படுவதாகக் கூறலாம். ஒவ்வொரு பொருளும் அதன் தன்மைக்கேற்ப மேற்கூறிய நுண்ணணுக்களை வெளியிடுகின்றன ; பிரதிபலிக்கின்றன அல்லது கிரகித்துக் கொள்கின்றன.

நமது புலன்களில் மேற்கூறிய நுண்ணணுக்களால் ஏற்படக்கூடிய மாறுதல்களைக் கொண்டு நாம் நமமைச் சுற்றியுள்ள பொருட்களில் சில தன்மைகளை அறிந்து கொள்கிறோம். இத் தன்மைகளைக்கொண்டு அப் பொருளினை நம்மால் முழுமையாக அறிய இயலாது. எனவேதான் தாயுமானவரும் 'பாராதி அண்டமெல்லாம் படர் கானற் சலம்போல் பார்த்தனையே, முடிவில் நின்று பார் எதுதான் நின்றது?' என்று கேட்கின்றார்.

இதனை மறுபடியும் 'ஈதர்' என்றே அழைக்கலாம். ஆனால் முதலில் கூறிய கற்பனை ஊடகத்திற்கும், இங்கு கூறப்படும் பொருளுக்கும் வித்தியாசங்கள் உண்டு. எனவே விஞ்ஞானிகள் இதனை சூனியம் (vacuum) என்றே அழைக்கிறார்கள். இதன் தன்மையினை அடுத்த இதழில் காணலாம்.

(தொடரும்)

திருமணம்

யோகாசன ஆலய ஆயுள் அங்கத்தினர் தேனாம்பேட்டை உயர்திரு T. T. முருகேச முதலியார் அவர்களின் இளைய குமாரன் திருநிறை செல்வன் மணிகண்டனுக்கும், மாங்காடு கிராமம் A. பால சுந்தர முதலியார் மகள் திருநிறைச் செல்வி சந்திராவுக்கும் 19-5-78 காலை 8 மணிக்கு இராயப்பேட்டை ஸ்ரீ பாலசுப்பிரமணிய பக்தஜன சபா திருமண மண்டபத்தில் திருமணம் நடைபெற்றது. பொதுச் செயலர் திரு C. இராமசுவாமி, திரு N. குருலிங்கம் ஆகியோர் கலந்து கொண்டு வாழ்த்தினர்.

யோகாசன ஆலய மகளிர் பிரிவு (சென்னை) நிர்வாகக் குழு உறுப்பினர் திருமதி M. வசுந்தரா தேவியின் சகோதரி மகள் திரு நிறைச் செல்வி சித்திராவை, திருநிறைச் செல்வன் இராதாகிருஷ்ணன் B.E., M.SC. அவர்கள் இல்வாழ்க்கைத் துணைவியாக ஏற்கும் மணவிழா 26—5—78 அன்று வருதுநகரில் இனிது நிகழ்ந்தது.

திருவாளர் N. நடேச முதலியார் அவர்களின் மகளும், யோகாசன ஆலய தண்டையார்பேட்டை கிளைச் செயலர் திரு N. ஏழுமலை அவர்களின் சகோதரியுமான செல்வி கலாராணி, குளமந்தை கிராமம் பொன்னுரங்க முதலியார் மகன் செல்வன் தீனதயாளனை கைத்தலம் பற்றும் மங்கல விழா 7—6—78 காலை 6 மணிக்கு நடைபெற்றது. வடஆற்காடு மாவட்டம் செய்யார் முனுசாமி முதலியார் திருமண நிலையத்தில் நடைபெற்ற இவ்விழாவில் யோகாசன ஆலய தலைவர் உயர்திரு கோ. மு. சுவாமி அவர்கள் கலந்துகொண்டு மணமக்களை வாழ்த்தியருளினார். மருவலகைச் சடங்கினை தலைமை தாங்கி நடாத்தி வைத்தார்.

சிறப்புக் கூட்ட நிகழ்ச்சிகள்

இராமநாதபுரம் மாவட்டம் முகவூர் யோகாசன ஆலய கிளையில் 28—5—78 ஞாயிறு காலை 9 மணிக்குச் சிறப்புக் கூட்டம் நடைபெற்றது. விருதை யோ. ஆ. மகளிர் பிரிவு செயலர் திருமதி K. மகமாயி யம்மாள் அவர்கள் 'பக்தி' என்னும் பொருளிலும், யோகாசனாலய துணைப் பொதுச்செயலாளர் திரு S. முருகேசபாண்டியன் அவர்கள் 'இந்து தருமம்' என்னும் பொருளிலும் சிறப்புரை நிகழ்த்தினார்கள். பொருளாளர் சா. முத்துராஜ் அவர்கள் வரவேற்பும், செயலாளர் திரு. பெ. தங்கராஜ் அவர்கள் நன்றியும் நவின்றனர்.

யோகாசன ஆலய மகளிர் பிரிவு (சென்னை) நிர்வாகக் குழு உறுப்பினர் திருமதி M. வசுந்தரா தேவி அவர்கள், ஷை நாளில இராஜ பாளையம் கிளை சிறப்புக் கூட்டத்தில் 'முக்கனி' என்ற தலைப்பில் பேருரையாற்றினார்கள். உயர்திரு தனுஷ்கோடி ராஜா அவர்கள் வரவேற்பும் நன்றியும் நவின்றனர்.

1—6—78 வியாழன் இரவு 7 மணிக்கு விருதை கஸ்தூரிபாய் காந்தி சேவா சங்கத்திலும் திருமதி M. வசுந்தராதேவி அவர்களின் சிறப்புரை நிகழ்ச்சி நடைபெற்றது. அவ்வமயம் திருமதி மங்களம் வரவேற்புரையும், திருமதி சுசீலாதேவி நன்றியும் கூறினர்.

செய்தி - S. சரஸ்வதியம்மாள், விருதை கிளை.

ஆலயக் கொள்கை ஆறு

புலவர் பா. ஆழ்வார்

(முன் இதழ்த் தொடர்ச்சி)

"சகல உண்மை அறிவிற்கும் அவ்வறிவால் அறியப்படுகின்ற அனுபவத்திற்கும் மூல காரணமாய் இருப்பவரே ஈஸ்வரர்"

—கொள்கை 2.

கடவுளின் தன்மையைக் கூறும் முதற் கொள்கையின் விளக்கம் முன் இதழ்களில் ஒருவாறு கண்டோம். அக் கடவுள், அறிவுக்கு அறிவாக நீக்கமற நின்று அறியப்படுகின்ற அனுபவத்திற்கு முதற் காரணனாக விளங்கும் தன்மையை இரண்டாம் கொள்கை வழி நின்று காண்போம்.

அறியுந் தன்மையுடையது அறிவு; உணருந் தன்மையுடையது உணர்வு. எனினும் இரண்டும் ஒன்றேயாம். அறிவு என்பது ஒன்றேயாயினும் அதன் கூறு ஆறுவகைப்படும். உடல் உணர்ச்சி ஒன்று மட்டும்மே உள்ள உயிர் ஓரறிவுயிராகும்: உடம்பொடு சுவை (நா) உணர்ச்சி உள்ளவை ஈரறிவுயிராகும். உடம்பு, சுவையொடு முகரும உணர்ச்சி யுடையவை மூவறிவுயிராகும். உடம்பு, சுவை, முகர்தலொடு பார்வையுள்ள வுயிர் நான்கறிவுயிராகும். உடம்பு, சுவை, முகர்ச்சி, பார்வையொடு கேட்கும் செவி யுணர்வும் உடைய உயிர் ஐயறிவுயிராகும். இவ்வைந்தறிவொடு ஒப்பற்ற பகுத்தறியும் அறிவுடைய வுயிர் ஆறறிவுயிராகும்.

தொல்காப்பியம் மரபியல் இருபத்தேழாம் சூத்திரம் நமக்கு இதனை நெறிபடுத்திக் கூறுகின்றது.

"ஒன்றறி வதுவே உற்றறி வதுவே
இரண்டறி வதுவே அதனொடு நாவே
மூன்றறி வதுவே அவற்றொடு மூக்கே
நான்கறி வதுவே அவற்றொடு கண்ணே
ஐந்தறி வதுவே அவற்றொடு செவியே
ஆறறி வதுவே அவற்றொடு மனனே
நேரிதின் உணர்ந்தோர் நெறிப்படுத் தினரே"

ஒன்று முதல் ஆறறிவு படைத்த உயிரினங்கள் யாவை என்பதனை சற்றே நோக்குவாம். வெளிப் பார்வைக்கு வயிரமாகவும் உட்புறம் வெட்டவெளியாகவும் உள்ள புல்லும், உட்புறம் வயிரமாக உடையன வாகிய மரமும், மற்றும் செடி கொடி போன்ற தாவர வர்க்கங்கள் யாவும் உடலுணர்ச்சி ஒன்று மட்டுமே உடைய ஓரறி உயிர்களாகும்.

புல்லும் மரனும ஓரறி வினவே
பிறவும் உளவே அக்கிளைப் பிறப்பே

—(தொல், மரபியல் - 28)

நத்தை, சிப்பி, சங்கு, கிளிஞ்சல் மற்றும் இவைபோல்வன உடலுணர்ச்சியோடு நாவின் சுவை யுணர்வும் உடைய ஈரறி வுயிர்களாகும்.

நந்தும் முரளும் ஈரறி வினவே
பிறவும் உளவே அக்கிளைப் பிறப்பே

—(தொல், மரபியல் - 29)

கறையான், எறும்பு மற்றும் ஈசல் போன்ற இனத்தைச் சார்ந்தவை. உடல், நாவொடு மூகரும் உணர்ச்சியுடைய மூவறி வுயிர்களாகும்.

சிதலும் எறும்பும் மூவறி வினவே
பிறவும் உளவே அக்கிளைப் பிறப்பே
—(தொல், மரபியல் - 30)

நண்டு, தும்பி, வண்டு, ஈ போல்வன, உடல், நா மூகரும் உணர்ச்சியொடு நோக்குந் திறனுடைய நான்கறி உயிர்களாகும்.

நண்டும் தும்பியும் நான்கறி வினவே
பிறவும் உளவே அக்கிளைப் பிறப்பே
—(தொல், மரபியல் - 31)

பறவை யினங்கள், விலங்குகள் மற்றும் வௌவால், ஆமை ஆகியவை, மெய், வாய், கண், மூக்கொடு செவியறிவும் உடைய ஐயறி வுயிர்களாகும்.

மாவும் மாக்களும் ஐயறி வினவே
பிறவும் உளவே அக்கிளைப் பிறப்பே
—(தொல், மரபியல் - 32)

மக்கள் எனப்படுவோரே மேற்கூறிய ஐயறிவோடு பகுத்தறியும் ஆறுவது அறிவைப் பெற்றவராவர். (தேவரும் நரகரும் ஆறறி வுயிர்களுள் அடங்குவர்)

மக்கள் தாமே ஆறறி வுயிரே
பிறவும் உளவே அக்கிளைப் பிறப்பே
—(தொல். மரபியல் - 33)

அறிவை அறியும் தனித்தன்மை இம் மானிட வர்க்கத்தினர்க்கே அளிக்கப்பட்டுள்ளது. அறிவுக்கு அறிவாக நின்றுணர்த்தும் பரம்பொருளை அறிபவரே இம் மானிட வர்க்கத்தில் சேர்க்கப்படுவர். மற்றையோர் மாக்கள் (விலங்கு) இனத்திலும் அதற்கும் கீழான குறையறிவுடையவர்களோடு ஒப்பாவர். 'சிவாநந்த போதம்' இதனை இங்ஙனம் கூறுகின்றது ;

மனிதரிலும் பறவையுண்டு விலங்குண்டு கல்லுண்டு மரமுமுண்டு
மனிதரிலும் நீர்வாழுஞ் சாதியுண்டு அநேககுல மனிதருண்டு
மனிதரிலும் மனிதருண்டு வானவரும் மனிதராய் வருவதுண்டு
மனிதரிலே பிறப்பறுக்க வந்ததேயருமை வகுத்தார் முன்னோர்.

அறிவை அறிந்தவரே அறிஞர் எனப்படுவர். இவ்வறிவை யறிவதுதான் தேடும் பொருள்கள் யாவற்றினும் ஒப்பரிய உயர்வாகும். முருகப் பெருமான் அருணகிரிப் பெருமானுக்கு இவ்வுண்மையை எடுத்தோதினராம். தாம் பாடிய திருப்புகழில் ;

"அறிவை அறிவது பொருளென அருளிய-பெருமாளே"

என வைத்துப் பாடுகின்றார். இவர் புகழ்ந்த இக்கூற்றின் உண்மையை ஆராய்ந்து அறிவது எந்த நாளோ? என தாயுமான அடிகளார்,

" அறிவை அறிவதுவே ஆகும் பொருள்என்(று)
உறுதி சொன்ன உண்மையினை ஒரும்நாள் எந்நாளோ"

என்கின்றனர்.

உண்மை யறிவு என்பது இதுவேயாம். இவ்வறிவை அறியச் செய்யும் பேரறிவு ஒன்றுண்டு. அதுவே பரம்பொருள் எனவும் கடவுள் எனவும் பல்லாயிரப் பெயர்கள் கொண்டு அழைக்கப்படுவது.

ஆயிரந் தெய்வங்கள் உண்டென்று தேடி
அலேயும் அறிவிலிகாள்—பல்
லாயிர வேதம் அறிவொன்றே தெய்வமுண்
டாமெனில் கேளீரோ?
சுத்த அறிவே சிவமென்று கூறுஞ்
சுருதிகள் கேளீரோ—பல
பித்த மதங்களி லேதடு மாறிப்
பெருமை யறிவீரோ?
ஒன்று பிரம முளதுண்மை யஃதுன்
உணர் வெனும் வேதமெலாம்—என்றும்
ஒன்று பிரம முளதுண்மை யஃதுன்
உணர்வெனக் கொள்வாயே.

இவ்வறிவை யறிவதென்பது, நான் யார்? என்ற விஞ எழுப்பில், கிடைக்கும் விடையாகும். இவ்வுடல் நீயா? சுவை, ஒளி, ஊறு, ஓசை, நாற்றம் ஆகிய ஐம்புலன்கள் நீயா? மனம், புத்தி, சித்தம், அகங்காரம் ஆகிய அந்தக்கரணம் நீயா? பத்துவித வாயுக்கள் நீயா? இங்ஙனம் விஞ விடுத்துக்கொண்டே சென்ருல் இல்லை! இல்லை! இல்லை! என்ற பதில்தான் நிற்கும். பின் நீ யார்? எனில், அறிவே நான்! உணர்வே நான்! என்ற பதிலே எஞ்சி நிற்கும்.

இவ்விதமான விளக்கத்தை நம் தாயுமாஞருக்கு மௌனகுரு அளித்ததாகக் கூறுகின்ருர்.

"பாராதி பூதநீ யல்லை—உன்னிப்பார்! இந்திரியங் கரணம்நீ யல்லை—ஆராய்! உணர்வுநீ என்ருன் :—ஐயன் அன்பாய் உரைத்த சொல் ஆனந்தம் தோழி—(சங்கர)

குருமார்கள் வாயிலாகவே இவ்வுண்மையைத் தெளிய வியலும். தெளிந்த பின்னரே அறிவுக்கு ஆதாரமான ஆண்டவனை உணர முடியும். "ஓடினேன் ஓடி உய்வதொரு பொருளால் உணர்வு எனும் பெரும்பதந் தெரிந்து நாடினேன் நாடி நான் கண்டு கொண்டேன் நாராயணு வெனும் நாமம்" என்ற திருமங்கையாழ்வாரின் திருவாக்கு சிந்திக்கற்பாலது. இதனின்றும் உணர்வு (அறிவு) என்பதைத் தெளிந்த பின்னரே அறிவுக்கு அறிவான பொருளை உணர்தல் சாத்தியம் என்பது வெளிப்படை.

பேரறிவை நாடுஞ் சமயம் தன்னறிவு அற்று விடுகிறது. இந்நிலைக்கு ஆன்ருேர் அனைவரும் வேண்டினர். "அறிவிற் கறிவு தாரகம் என்று அறிவோடு அறியாமை நெறியிற் புகுதாது ஓர்படித்தாய் நின்ற நிலையும் தெரியாது, குறியற்று அகண்டாதீத மயக்கோதில் அமுதே நினைக் குறுகிப் பிறிவற் றிருக்க வேண்டாவோ பேயேற் கினிநீ பேசாயே"

இங்ஙனம் அறிவுக்கறிவாம் தாரகத்தைப்பற்றிப் பிறிவற நிற்க வேண்டுபவர் தாயுமான அடிகளாவார். தன்னை யறிய ஓர் எழுத்தும் தலைவனை யுணர ஓர் எழுத்துமாக உபாயங் காட்டி அழைத்துச் செல் கின்றனர் குருமார்கள். மனிதராகப் பிறந்த ஒவ்வொருவரும் இதைப் பெறுவதற்கு குருவருளும் திருவருளும் கூடவேண்டும். பெறுவதற்குக் காதலாகிக் கசிந்து கண்ணீர் மல்க வேண்டும். உறுதியான வைரம்

ராப்பர் 3-ம் பக்கம் பார்க்க.

படைத்த நெஞ்சமும் வேண்டும். 'எப்பொருள் எத்தன்மைத்தாயினும் அப்பொருள் மெய்ப்பொருள் காண்ப தறிவு' என்ற தெளிவு பெறுதல் வேண்டும்.

தன்னையறிந்த சாதகன் தலைவனை யுணர்வதற்குச் செய்யும் சாதனையில் உண்டாகப் பெறும் அனுபவங்களுக்கும் மூலப் பொருள் காரணனாக இருக்கின்றான். "அவனன்றி ஓரணுவும் அசையாது எனும் ஆப்தர்" இவ்வனுபவத்தைப் பெற்றவரே யாவர்

இதை ஒவ்வொருவரும் தம் தம் அனுபவத்தில் உணர்தல் வேண்டியே யோகாசன ஆலயம் இவ்விரண்டாம் கொள்கை வழி நின்று செயல் வடிவில் அருள் தொண்டாற்றி வருகின்றது.

—(கொள்கை-3. அடுத்த இதழில்)

கிளை தொடக்கம்

இராமநாதபுரம் மாவட்டம் இராஜபாளையம் அருகில் உள்ள முகவூரில் 12—2—78 அன்று யோகாசன ஆலய கிளை அமைக்கப்பட்டது. நிர்வாக உறுப்பினர் வருமாறு:

செயலர் திரு பெ. தங்கராஜ, துணைச் செயலர் T. M. கோபாலகிருஷ்ணன், பொருளாளர் திரு சா. முத்துராஜ் ஆகியோர்.

ஸ்ரீ தாயுமான சுவாமி சன்மார்க்க சங்கம்

ஸ்தாபிதம் 1951

அரண்மனை இராமநாதபுரம்

1978ஆம் ஆண்டின் நிருவாகக் குழுவினர் வருமாறு:

புரவலர்: மாண்புமிகு சேதுபதி மகாராஜா அவர்கள், தலைவர்: திரு. S. M. R. சங்கர நாராயணன் செட்டியார், உபதலைவர்: திரு. S. இராமமூர்த்தி, செயலாளர்கள்: திரு. R. ரமணி, திரு P. லெட்சுமண நாடார், பொருளாளர்: திரு. M.V.R. வெங்கட்ராமன் செட்டியார்.

செய்தி: P. லெட்சுமண நாடார்,

பரமாய அஞ்செழுத் துள்நடு வாகப்
பரமாய நவசிம பார்க்கில் மவயநசி
பரமாய சியநம வாம்பரத் தோதிற்
பரமாய வாசி மயநமாய் நின்றே.

மேலான திருமந்திரமாகிய 'சிவயநம' என்னும் திருவெழுத்தைந் தனுள் நடுவாய் விளங்குவது 'ய'கரமாகும். இந்தெழுத்தினை யநவசிம, மவயநசி, சியநமவ, வசிமயந என நான்கு வகையாகக் கணிக்கப்படும். இங்ஙனம் நிலைமாறி ஓதுதல், பொருள் உண்மை நன்கு புலனுறப் பதிதற்கேயாம்.

— திருமந்திரம்.

Edited & Published by Sri N. Gurulingam, Pracharagar, Yogasana Alayam, 9-4, Krishnapuram, Kodambakkam, Madras-600094. Printed by Sri C. M. Sivaraman, at T. G Sambandam & Co., Counian Press, 169, (41) Broadway, Madras-600001. (June-1978)